முரசொலி
வார இதழ்.
ஆசிரியர் மு. கருணாநிதி
2 அணா

முரசு 2 | சென்னை | 6—1—56 | வெள்ளி | ஒலி 41

# அதிலுமா - சுயநலம்?

பளிங்கு நீரோடை பசலைகளின் நெஞ்சம்! அங்குதான் எரிமலைக் குழம்பென வார்த்தைகளைக் கொட்டியிருக்கிறார்.

அன்பு முகத்தையும், அருளொழுகும் விழியையும் கண்டு மனங் குளிரும், அருப்பு உள்ளம் கொண்ட குழந்தைகளுக்கு மத்தியிலே கொதிப்பேறிய நிலையில் நெருப்பு வார்த்தைகளை உமிழ்ந்திருக்கிறார் நேரு பண்டிதர்.

'புகழ்மிக்க மாவீரன், ஆனால் தன்னைத்தானே ஏமாற்றிக் கொண்ட வாலிபன்!' என்று கிரேக்க மாவீரன் அலெக்சாந்தரைப்பற்றி உலக சரித்திரத்திலே விமர்சிக்கும் இந்த சீலர், 'ஆசியாவின் ஜோதி ஆனால் தனைத்தானே ஆத்திரச் சகதியில் தள்ளிக் கொண்ட அவசரக்காரர்' என்ற புது வாசகங்களுக்கு துரிதமாகத் தன்னைத் தயாரித்துக்கொண்டு வருகிறார்.

'பொதுவாகவே நான் கொஞ்சம் அவசரக்காரன், திடீர் திடீரென ஆத்திரப் படுவேன்; சில நேரங்களில் உணர்ச்சிக்கும் அடிமைப்பட்டு என் நிலையையும் மறந்து விடுவேன்' என்று சுயசரிதையிலேயே தன்னைப்பற்றி அறிவித்துள்ள நேரு பண்டிதர் வயது வளர வளர ஆத்திர உணர்ச்சிகளுக்கு வெகு விரைவில் அடிமையாகி விடுகிறார் என்பதை அவர் அரசியல் நடைமுறைகளைக் கவனிப்போர் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.


நேரு பண்டிதரின் வாழ்க்கை வரலாறுகளை எழுதியிருக்கும் அத்தனை ஆசிரியர்களும், 'நேரு ஒரு ஆத்திரக்காரர்' என்ற வாசகங்களை அந்த ஏடுகளில் நுழைக்காமல் முடிப்பதில்லை; சில ஆசிரியர்கள், அதையே கொஞ்சம் மெருகேற்றி நேரு பண்டிதர் சற்று 'உணர்ச்சி வயப்பட்டவர்' என்று குறிப்பிட்டுள்ளனர்.

★

இந்த ஆத்திரக்காரர்தான் ஜனவரி 3ம் தேதி ஆக்ராவில் குழந்தைகளின் மியூசியம் ஒன்றைத் திறந்து வைக்க அழைக்கப்பட்டிருந்தாராம்;

நகர கல்லூரி கட்டிடத்தில் இந்த திறப்புவிழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

திறப்பு விழாவிற்கு வந்தவரை பாராட்டுகின்ற முறையில், விழாவிற்கு ஏற்பாடு செய்திருந்தவர் மாலை அணிவிக்க வந்தபோது 'உங்கள் மாலையும் மரியாதையும் எனக்கு வேண்டாம்' என்று கூச்சலிட்டு, தனது கைகளால் மலர் மாலையை ஒதுக்கித் தள்ளிவிட்டாராம்.



கழுத்திலே அணி செய்ய வேண்டிய அந்தப்பூமாலை நேரு பண்டிதரின் கையிலே சிக்கி சிதறுண்ட நிலையிலே புழுதி மேட்டிலே விழுந்து புரண்டதாம்!

'மனிதருள் மாணிக்கமாயிற்றே' ஒளி இருக்கும் என்று நம்பி மாலை சூட்டி மரியாதை தெரிவிக்க அருகே சென்ற தோழர் மனமொடிந்த நிலையில் மேடையை விட்டு இறங்கிவிட்டாராம்!

'முதலிலேயே எனக்குத் தெரிந்திருந்தால் இங்கு வந்திருக்க மாட்டேன்! இந்த திறப்புவிழாவை ஏற்பாடு செய்தவர்கள் யார்?' என்று ராஜ மிடுக்கோடு மேடைமீது நின்றுகொண்டு முழக்கமிட்டிருக்கிறார் நாட்டின் முதல்வர்!

'சிறுசு'களைக் கண்டால், சீதள நிலவாகி விடும் நேரு பண்டிதர். அன்று சீறிடும் நாகமாக மாறியிருக்கிறார்.

★

எம். டி. ஜெயின் கல்லூரியில் குழந்தைகளால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்த அந்த விழாவில் கலந்து கொள்ளச் சென்ற நேரு. அக்கல்லூரியின் புராதன நாகரீகச் சின்னங்களைக் கொண்ட மியூஸியத்தை திறந்து வைக்க வேண்டிக் கொள்ளப்பட்டாராம்!

அந்த மியூஸியத்திற்குள் நுழைந்ததும் அசோகன்-அக்பர்-புத்தர்—காந்தி போன்றவர்களின் சிலைகள் வைக்கப் பட்டிருந்தனவாம்; அவைகளனைத்தும் அழுக்கேறிய நிலையில் காணப்பட்டதாம். இப்படி பல சிலைகளைப் பார்வையிட்டுக் கொண்டு வரும் பொழுது நேருவின் சிலை ஒன்றும் அங்கேவைக்கப்பட்டிருந்ததாம்! உடனே அவர் புருவங்கள் நெற்றியின் உச்சியைத் தொட்டு—விழிகளிலிருந்து தீப்பொறிகள் கிளம்பிற்றாம்! முகம் சிவந்து சூடேறிற்றாம், இரண்டொரு விநாடிகளில் பொறுமையை இழந்து விட்டு புலியெனச் சீறினாராம்!

இவ்வளவிற்கும் காரணம் வேறொன்றுமில்லை, அந்த மியூஸியத்திலே வைக்கப்பட்டிருந்த அவருடைய சிலை 'காண சகிக்க முடியாத அளவிற்கு கோரமாக காட்சியளித்துக் கொண்டிருந்ததாம்!

அந்த சிலையை வடித்த சிற்பி ஒரு வேளை, நேரு பண்டிதர் ஆத்திரத்துக்கு அடிமையாகி 'நான்சென்ஸ்', 'காட்டுமிராண்டிகள்' என்ற வார்த்தைகளை உச்சரித்துக் கொண்டிருந்தபோது, அவர் முகத்தை கவனித்துக் கொண்டிருந்தாரோ என்னவோ! அவ்வளவு 'கோரமாக' காட்சியளித்ததாம் அந்த சிலை!

அழுக்கேறி — அலங்கோலமான நிலையில், அசோகர், அக்பர், புத்தர், காந்தியடிகள் போன்றவர்களின் சிலைகள் தோற்றமளித்துக் கொண்டிருந்தபோது வாய்மூடிக் கொண்டிருந்த நேரு பண்டிதர் தனது உருவச் சிலையைக் கண்டதும்—பொறுமையை இழந்து விட்டிருக்கிறார் ஜனவரி 3-ம் தேதி சுதேசமித்திரன் ஏடு இப்படித்தான் குறிப்பிட்டிருக்கிறது)

இந்திய அரசியலில் 'ஜனநாயக சிற்பத்தை' உருவாக்க வேண்டிய கடமையை மறந்துவிட்டு 'சர்வாதிகார சாயல் படிந்த சிற்பத்தை' செதுக்கிக் கொண்டிருக்கும் இவர்-கல்லை சிற்பமாக்கிய சாதாரண சிற்பியை நோக்கி கண்களில் தீப்பொறி பறக்க கண்டனக் குரல் எழுப்பி இருக்கிறார்:

அதுவும், தனது உருவச்சிலை கோரமாகக் கிடப்பதைக் கண்டவுடன்தான், இவர் முகம் கோணிவிட்டதாம்! இதற்கு அவர் பாணியிலேயே குறிப்பிட வேண்டுமென்றால், 'சிறுபிள்ளைத் தனமான, இந்த அற்ப விஷயங்களில் கூடவா? அந்தோ நேருவே! சகிக்க முடியவில்லை! சகிக்க முடியவில்லை!

★

# ★ சரித்திரம் திரும்பிவிடும்! ★




**அன்புள்ள குமார்,**

'அரும்பி இருக்கும் புத்தாண்டில் புதுமைகள் செழிக்கட்டும்' என்ற வாழ்த்துரையை சுமந்து கொண்டுவந்த உன் கடிதம் கிடைத்தது. மகிழ்ச்சி! பேதமில்லாத சமதர்ம உலகை நோக்கி நடந்து கொண்டிருக்கும் நாம், பூரிப்போடும், புது உற்சாகத்தோடும் புத்தாண்டிலே அடியெடுத்து வைப்போம்!

கூட்டைவிட்டுக் கிளம்பிய சிங்கம், கொஞ்சதூரம் வந்த பிறகு ஒரு இடத்தில் நின்று குகையிலிருந்து எவ்வளவு தூரம் வந்திருக்கிறோம் — இன்னும் நாம் செல்லவேண்டிய தூரம் எவ்வளவு? என்று கணக்கிட திரும்பிப் பார்க்குமாம்! அதைப் போலவே புத்தாண்டில் அடி எடுத்து வைக்கும் நாம், கடந்துவந்த பாதையைக் குறித்தும், இனி நடக்க வேண்டிய பாதையைக் குறித்தும் ஒரு விநாடி சிந்திப்போம்: கடந்தபோன நிகழ்ச்சிகளை நினைவுபடுத்திக் கொள்வது, புதுப்பயணத்திற்கு ஊக்கம் தரும் மருந்தாகும்!

முன்பொருமுறை, நம் குடும்ப சரித்திரம், திராவிடர் குடும்பத்தைதான் குறிப்பிடுகிறேன்! முறைப்படி எழுதப்படவில்லை என்று குறிப்பிட்டிருந்தேனே, அது நினைவிருக்கிறதா? மறந்து போயிருந்தால் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்திக் கொள்!

இரண்டொரு வரலாற்று ஆசிரியர்களைத் தவிர பெரும்பாலான சரித்திர ஆசிரியர்கள் வடநாட்டையே மத்திய பீடமாக வைத்துக் கொண்டு— அந்த நாகரீகத்தையே இந்திய உபகண்டத்தின் முழுநாகரீகம் என்று மயங்கி இருக்கின்றனர். யுவான் சுவாங், மெகஸ்தனிஸ், பாகியான், போன்ற சீன யாத்திரிகர்கள் தங்கள் குறிப்புகளில் தென்பகுதிக்கு முக்கியத்வம் கொடுத்து— இந்திய உபகண்டத்தில் இரண்டு வேறுபட்ட நாகரீகங்களின் கோலாட்டம் காணப்படுகிறது என்று குறித்திருக்கின்றனர்கள். 'பிளினி' என்ற வரலாற்று அறிஞர் இந்திய உபகண்டத்தின் நாகரீகமே தென்னகத்திலிருந்துதான் தோன்றி இருக்க வேண்டும் என்று எழுதியுள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வந்த வரலாற்று ஆசிரியர்களுக்கு, தென்னகம் அறிமுகம் செய்து வைக்கப்படாததால் சில வரலாற்று அறிஞர்கள், தெளிவாக தெரியாமல் யாத்ரா ஏடுகளைச் சுருப்பி வைத்திருந்தனர். இந்த நிலையில் ஈராஸ்பாதிரியார் போன்றவர்கள், ஆரிய-திராவிட நாகரீகங்களைப் பிரித்துக்காட்டி, தெளிவுபடுத்தினர்.

குமார், நாகரீக மிக்க ஒரு இனத்தின் வரலாறு முறைப்படி எழுதப்படாமல் இருப்பது திராவிடர் சமுதாயத்திற்கு எத்தகைய நஷ்டம் என்பதை நினைத்துப்பார்! கடந்தகால நிகழ்ச்சிகளைக் கோர்வைபடுத்திக் காட்டும் சரித்திரம் வரிசைப்படுத்தி வைக்கப்படாததால்தான், நேரு போன்ற வடநாட்டு சரித்திர ஆசிரியர்கள் 'வடநாடு என்னுடையதும் அல்ல, தென்னாடு உங்களுடையதும் அல்ல!' என்று பேசுகின்ற அளவிற்கு துணிவு பெற்று இருக்கின்றனர்.

தென்னகத்து சரித்திரத்தில் இருள் படிந்த காலங்கள் நிறைய காணப்படுகின்றன. அந்த இருள் சூழ்ந்த பகுதிகளை, வரலாற்று ஆசிரியர்கள் ஒளி பெறச் செய்ய வேண்டும்.

'திராவிடம் பல சிறப்பான பண்பாடுகளின் உறைவிடம், ஆனால் அத்தகைய சிறப்பான ஒரு நாட்டின் சரித்திரம் சரியான முறையில் வெளிவரவில்லை, மக்கள் திராவிடர் நாகரிகத்தைப் பற்றி அறிந்து கொள்ள ஆசைப் படுகின்றனர்' 'இந்து' ஏட்டில் பேராசிரியர் பண்டார்கர் எழுதியுள்ள வாசகங்கள்தான் மேலே தந்திருப்பது!

குமார்; மேலை நாட்டார் எழுதுகின்ற இலக்கியங்கள் உண்மைச் சரித்திரத்தையே பின்னணியாக கொண்டிருக்கின்றன. ஆனால் நம் நாட்டு ஆசிரியர்களோ சமயத்திற்குத்தான் இலக்கியங்களில் முதலிடம் தருகின்றனர்!

''இந்திய உபகண்டத்தின் சரித்திரத்தை எழுதும் ஆசிரியர்கள் சில உண்மைகளை மறைத்து விடுகின்றனர். ஆரியர்களின் நம்பத் தகாத சதைகளைக் குறித்தும், இராமாயணம் போன்ற ஆரிய ஏடுகளில் புகுத்தப்பட்டுள்ள 'திராவிடர் இனத்திற்கு' மாறான கருத்துக்களையும், சிந்திக்காமல் விட்டுவிடுகின்றனர்! ஆரிய திராவிட நாகரீகங்களின் வேறுபாட்டை துணிந்து விளக்க ஏனோ தயங்குகின்றனர்'' என்று பேராசிரியர் 'பர்கித்தர்' குறைபடுகின்ற அளவிற்கு திராவிடர் சரித்திரம் இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகிறது. அதோடு மட்டுமல்ல குமார்!

சில ஆசிரியர்கள் உண்மைக்கு நேர்மாறாக திராவிடர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தி— ஆரிய திராவிட, இன உணர்விற்கே முற்றுப்புள்ளிவைத்து, 'ஏக இந்தியா' என்ற ஒரே மனப்பான்மையை மக்களிடையே உண்டாக்க முயற்சித்து வருகின்றனர்; கொழுந்து விட்டு எரியும் திராவிட இன உணர்வை இத்தகைய இருட்டடிப்பு மூலமாக குழிதோண்டிப் புதைத்து விடலாம் என்று தப்புக் கணக்குப் போட்டு வருகின்றனர்!

கல்கத்தாவிலே கூடிய 18 வது சரித்திர மாநாட்டிற்கு தலைமை வகித்த கே. எம். பணிக்கர் பேசுகையில், மேற்கத்திய நாடுகளின் சரித்திரத்தைப் படிப்பதிலும், போதிப்பதிலும் தான் இந்தியாவிலுள்ள சர்வ கலாசாலைகள் பாடுபடுகின்றன வென்றும், இந்திய உபகண்டத்தின் பல்வேறுபட்ட நாகரீகங்களின் சரித்திரத்தை முறைப்படி ஆராய்ந்து எழுத முன்வருவதில்லையென்று, குறிப்பிட்டு இப்பொழுது உலவிக் கொண்டிருக்கும் இந்திய சரித்திரங்கள் முறைபாக எழுதப்பட்டவை அல்லவென்றும், இதில் திருத்தப்பட வேண்டிய பகுதிகள் நிறைய இருக்கின்றன வென்றும், அந்த அந்த இனமக்களின் பண்டைய இலக்கியங்களை அடிப்படையாக வைத்து ஆராய்ந்த பிறகே சரித்திரம் எழுதப்பட வேண்டும் என்றும், இந்திய உபகண்டத்தின் சரித்திரத்தை-குறிப்பாக தென்னகத்து வரலாற்றை முறைப்படி எழுத வேண்டுமென்றால் மூன்றாவது நூற்றாண்டிலேயே தென்னகத்தோடு தொடர்பு கொண்டிருந்த சீன சரித்திரத்தை ஆராய்ந்து, சரித்திரம் எழுதப்படவேண்டும் என்றும் வரலாற்று ஆசிரியர்களுக்கு நினைவுபடுத்தியுள்ளார் கே. எம். பணிகர்.

இதையேதான் தென்னகத்து சரித்திர ஆசிரியர்களுக்கு நாமும் நினைவுபடுத்த விரும்புகிறோம். சிதறிக்கிடக்கும், திராவிட இனக் குறிப்புகளை, வகைப்படுத்தி முறையான ஒரு சரித்திரம்,-திராவிடர்களின் மாண்பு கூறுவதாய்! கீர்த்தி பாடுவதாய்! அமைக்கப்பட வேண்டும் என்று திராவிடர்களின் சார்பில் கேட்டுக் கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசியல் சுழலில் சிக்கி-தாயக விடுதலைக்காக நாம் போராடிக் கொண்டிருப்பதால்-அந்த திருப்பணியை தென்னகத்து வரலாற்று ஆசிரியர்களிடம் ஒப்படைப்பதுதான் முறை!

குமார், சரித்திரம் திரும்புவதற்குள்-சரித்திரத்தை திருத்தி அமைப்பதுதான் இன்றைய வரலாற்று ஆசிரியர்கள், வருங்கால சந்ததியினருக்கு செய்கின்ற பெரிய தொண்டு என்று நான் கருதுகிறேன்;!

அன்புள்ள,
**பொன்முடி.**

---

## 'தென்றல்' இலக்கியப் போட்டி பரிசளிப்பு விழா!

ஒத்திவைப்பு

8-1-56 ந் தேதி யன்று காரைக்குடியில் நடைபெறுவதாக இருந்த பரிசளிப்பு-பாராட்டு விழா, கருணாநிதி அவர்களின் உடல்நலக் குறைவினால் ஒத்திவைக்கப்பட்டது என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**பரிசு பெற்ற எட்டுப் பேருக்கும் பரிசுத் தொகைகள் அனுப்பப்பட்டு விட்டன.**

கண்ணதாசன்
ஆசிரியர் : ''தென்றல்''

# தலையங்கம்

**காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;**
**கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!**

சென்னை 6—1—56 வெள்ளி

## ஆக்ரா ஆலாபனை

மக்கள் சரியான முறையில் சிந்திக்க வழி காட்டுவது விஞ்ஞானிகளது கடமையாகும்.

★

விஞ்ஞானம் சரியான வழியில் கடைப் பிடிக்கப்படாவிட்டால் அது அழிவைத் தான் தேடித்தரும்.

★

—இப்படிப் பல பொன் மொழிகளை உதிர்த்திருக்கிறார் ஆசியாவின் பரிதி எனப் புகழப்படும் பிரதமர் நேரு!

இந்தியா பூராவிலுமிருந்து கூடிய 1200 விஞ்ஞானிகளும், தொழில் நுட்ப வல்லுனர்களும் கலந்துகொண்ட ஆக்ரா மாநாட்டில் தான் அறிவியல் பற்றிய கருத்துக்கள் மலர்ந்திருக்கின்றன!

"எல்லாம் அவன் செயல்; அணு அசைவதும், அணு குண்டு தயாராவதும்கூட அவன் செயல்தான்" என்று ஆச்சாரியாரைப்போல திண்ணை வேதாந்தம் புரியாமல் இருபதாம் நூற்றாண்டின் நிலையுணர்ந்து அவர் பேசியிருப்பது உளம் மகிழ்வித்தாலும்கூட அந்தப் பொன்னான மொழிகளுக்குப் பின்னே இளித்துக் கொண்டிருக்கும் பித்தளைத் தகட்டை நம்மால் புரிந்து கொள்ளாமலிருக்க முடியவில்லை.

சூரியனும், சந்திரனும் ஒரே நேர் கோட்டில் நிற்கும்போது இடையே பூமி சுழல நேர்ந்தால் சந்திர கிரகணம் வருகிறது!

அன்றைய தினம் அரசாங்கம் விடுமுறையளிக்கிறது—தலை முழுகிக் கருமம் தொலைப்பதாக நினைப்போருக்கு வசதி செய்து தருகிறது, விஞ்ஞானத்தின் பெருமை பற்றி அயல் நாட்டவரும் அகமகிழும் வண்ணம் பேசிவரும் மேதை ஒருவரை தலைமையிடத்தில் கொண்டிருக்கும் ஆட்சி பீடம்!

சூரிய, சந்திர கிரகணங்கள்—இவை அறிவியலின்படி எப்படியெப்படி தோன்றுகின்றன என்பதைப் பற்றி ஐந்தாம் வகுப்பு மாணவனுக்குக்கூட தெரியும்!

ஆனல் மடமைப் புற்றுக்கு எதிரே நின்றுகொண்டு மகுடி ஊதி மனமகிழ்வு கொள்ளும் இந்த மாவீரர்கள் அன்றுதானே உத்யோக பூர்வமாய் ஓய்வு கொடுத்து, திருவிழாக் கொண்டாடுகிறார்கள்!

சென்ற மாதம் வந்துசென்ற கிரகணத்தின்போது சென்னை கடற்கரை முழுக்கு காரணமாக இரு உயிர்கள் பலியாயின.

—கும்பமேளா நடத்தி கும்மாளம் போட்டவர்கள் இதையும் தானே அனுமதிக்கிறார்கள்!

—விஞ்ஞானம் இப்படியெல்லாம் தவருன வழிகளில் கடைப் பிடிக்கப் படுகின்றன!

சிந்திக்கச் செய்யும் அறிவியல் நெறி அஞ்ஞானத் திசை நோக்கி கைகளை நீட்டுகிறது !

ஆக்ராவிலே நேரு குறிப்பிட்டார்: விஞ்ஞானம் சரியான வழியில் கடைப்பிடிக்கப் படாவிட்டால் அது அழிவைத்தான் தேடித் தரும்-என்று!

இந்த உண்மையை உணர்ந்தவர் உள்ளுவாரா கிரகணத்துக்கும், அமாவாசைக்கும் விடுமுறை அளிப்பது போன்ற அவச் செயல்களை!

நாமறிவோம்; நிச்சயம் ஆக்ராவிலே அடுக்கடுக்காய் விஞ்ஞானப் பெருமைகளை பறைசாற்றியவருக்கு, சொல்லிய வழியிலே செயல் புரியத் துணிவு வராது! விளக்கத்திற்கான வாதங்களை நீட்டினாலோ அவர் சொல்வார், அணு ஆயுதங்களை பற்றியல்ல நான் இவைகளை மொழிந்தேனென்று !

உண்மைதான்; அவர் புகன்றது தொகை தொகையாய் மக்களை கொன்று போடும் அணுக் கருவிகளைப் பற்றிதான்!

தேள் கொடுக்கிலே விஷமிருக்கிறதே என்று கூறிக் கொண்டே, அதன் வாலில் உள்ள மணிகளைப் பார்; முத்தாரம்போல் வரிசை வரிசையாய் கோர்த்திருக்கும் அதன் அழகைப் பார்—என்று அதை நசுக்கி எறியாமல் இருப்பது அறிவீனமாகும்!

—ஆனல் இந்த நாட்டிலோ அதைத்தான் செய்கிறார்கள் பண்டிதர் எனப் பெயர் பெற்று பாராளும் தகுதி பெற்றிருப்பதாக நினைக்கப்படும் தேசியக் கூடாரத்துக் கனம்கள்!

அணு, அபிட்ரஜன் ஆயுதங்கள் தேள் கொடுக்கு என்று தேம்பாவணி புனைவோர், அமாவாசைக்கு விடுமுறை வழங்குவது கொடுக்கிற்குப் பின்னே பொருந்தி யிருக்கும் விஷத்தின் மூலஸ்தானத்தைப் புகழ்வதாகும்—என்பதை உணர வேண்டும் !

ஆக்ராவிலே பண்டிதர் துவங்கிய ஆலாபனம் இவை போன்ற நல்ல காரியங்களுக் கெல்லாம் இனியாவது ஆவன செய்யுமா?

★ ★ ★

## எது உண்மை?

★

'வட நாடு என்னுடையதும் அல்ல!
தென்னுடு உங்களுடையதும் அல்ல!'

[பாலக்காட்டில் நேரு].

★

'தென்னுடு இந்தியாவின் பூர்விக
குடிகளான திராவிடர்களுக்கு சொந்தமானது'!,

[உலக சரித்திரத்தில் நேரு]

★ ★ ★

## முக்கிய அறிவிப்பு

★

அடுத்த வார இதழ் எழில்மிகு பொங்கல் மலராக உங்கள் கரங்களிலே மிளிரும்!

முரசொலி அலுவலகத் தொழிலாளர்களுக்கு பொங்கல் விடுமுறை காரணமாக 20—1—56-ந் தேதியஇதழ் வெளிவராது.

27—1—56-ந் தேதிய முரசொலி முற்றிலும் புதிய அமைப்புடன் வெளிவருமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## அண்ணாவின் பொன்னெழுத்து மின்னிட ஆரம்பமாகும்

# பொங்கல் மலர் முழுவதும்

### அழகு தமிழ் கொழிக்கும் இதழ்கள் காண்பீர்!

★ **புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்** **'கோயில் இரு கோணங்கள்'** என்னும் தலைப்பிலே மின்வெட்டு போன்ற சொற்களால், சைவத்தின் மிருகச் செயலை திக்கெட்டும் பறை சாற்றுகிறார்; ஓரங்க நாடக உருவில் எண்ணாயிரம் சமணர் தம் உறவினர் கூந்தல் விரித்துக் கோவெனக் கதறியழுத சோகக் கதையை கண்ணீரால் எழுதியிருக்கிறார்!

★ **நாவலர் நெடுஞ்செழியன்** — பிறிதொரு சொல்—வெல்லும் சொல் இன்றி, வெல்லச் சொல் உதிர்க்கும் பொதுச் செயலாளர் தன்னுடைய மேடை அனுபவத்தை **'முதல் மேடைப் பேச்சு'** — என்னும் தலைப்பில் தெரியப் படுத்துகிறார்! வரலாறு செய்யும் நாவலருடைய 'ஆண்டனி' பேச்சின் ஆரம்பத்தை விளக்கும் ஓவியம் இது!

★ **டாக்டர் மு. வ.** — தமிழ்த் தாயின் குரல்வளையை நெரித்துவிட்டு விபச்சார இந்திக்கு வெற்றிலைப் பாக்கு வைக்கும் விவேகமற்றோரை நோக்கி **'முடியுமா?'** என்று வினா எழுப்புகிறார் புதுமை இலக்கியத்தின் தூதுவராம் வரதராசனார்!

★ **கி. ஆ. பெ. விசுவநாதம்** — சாணிக்குப் பொட்டிட்டு, சாமி யென்று வணங்கும் இனம், மந்தை மந்தையாய் உயிரினத்தைக் கொலை செய்து வேள்வி புரிந்த கதையை கேலி புரிகிறார், 'வேட்டலின்' என்ற தலைப்பில் தமிழ் வீரர் கி.ஆ.பெ!

★ **கலைவாணர் என். எஸ். கே.**—காலமும் சூழ்நிலையும் உணர்ந்து விலாநோகும் சிரிப்பில் நம்மை மூழ்கவைப்பவர் **'வீரமும் ஈரமும்'** பற்றி நகைச் சுவைததும்ப அரிய எண்ணங்களை உதிர்த்திருக்கிறார், தென்னாட்டுச்சார்லி!

★ **என். வி. நடராசன்**—அருமை நண்பர் என். வி. என். போலி வேஷதாரிகளின் புகலிடத்தைத் தெளிவுபடுத்துகிறார், **ஜனநாயகப் போர்வையில் தேசியத்தாரின் ஏகாதிபத்யம்'**—என்னும் தலைப்பில்!

★ **சி. பி. சிற்றரசு**—கலை நாட்டுக்கா? நாட்டு மக்களுக்கா! கலை கலைக்காகவா? நாகரிகத்தை விலை கூறுவதற்காகவா?—**எதற்கு?** என்று அதட்டிக் கேட்கிறார் சிந்தனைத் துணைகொண்டு சீறியெழும் புயலெனப் பேசும் தோழர் சிற்றரசு!

★ **க. அன்பழகன்**—புத்தாண்டு பிறந்துவிட்டது; கத்து கடல ஞாலத்தில விடுதலைக் கதிரோன் தலைகாட்டி விட்டான்; புலிக்குப் பிறந்தவர்களே! **புதுக்கணக்குப் போடுங்கள்** என்கிறார் பேராசிரியர் அன்பழகனார்.

★ **மதியழகன்** — **"மணி மகுடம்— ஒரு ஆராய்ச்சி"**—நாடக விமர்சனமல்ல; ராஜமாளிகை வாழ்வோர் நடத்திய சரச நாடகத்தின் ருசிகரமான தொகுப்பு. நண்பர் மதியழகன் தீட்டியிருக்கும் தென்னாதமிழ்ஓவியம்!

★ **இராமாமிர்தத் தம்மையார்**—பெரியாரின் துணைவியாய், அவர் பெற்ற அறிவியக்கத்தின் செல்வங்களுக்குத் தாயாராய் தனி வரலாறு சமைத்த அன்னை நாகம்மையார் பற்றி அருமருந்தன்ன செய்திகளை வடித்துத் தருகிறார் மூதாட்டியார்!

★ **புலவர் குழந்தை**—ராஜராஜன் இரணகளச் சூரன்; தமிழகத்தை ஒற்றுமை படுத்திக் காட்டியவன்—அவனைத்தான் குற்றவாளிக் கூண்டுக்குக் கொண்டுவருகிறார் இராவண காவியம் தந்த ஏந்தல் புலவர் குழந்தை, **'போலிச் சோழர்கள்'** என்ற கட்டுரை மூலம்!

★ **அரங்கண்ணல்**—**"கறையான் புற்றெடுக்க"** அழகுத் தமிழ் கொஞ்ச, யாழின் ஒலி நிகர் இனிமை தவழ, சங்க இலக்கியத்தின் துணைகொண்டு தமிழர் தம் பங்கம் துடைக்கிறார், நண்பர் அரங்கண்ணல்.

★ **தில்லை-வில்லாளன்**—**வாழ்க்கை** பற்றிய விளக்கம் தருகிறார் சொல்லுக்குச் சொல் பலாவின் இனிமை காட்டும் தோழர் தில்லை-வில்லாளன்!

★ **பன்மொழிப் புலவர் அப்பாதுரை**—சோவியத் நாட்டில் சூழ்ந்திருக்கும் இன்பம் இங்கு எப்போது வரும்-என்பதற்கான விளக்கம் தருகிறார், அப்பாதுரையார்!

★ **எஸ். வி. லிங்கம்**—நரை முடிக்கிழவராம்; வட நாட்டிற்கு திறை கொடோம் என பறைசாற்றும்போது அரும்பு மீசைவாலிபராம் லிங்கம் இணைக்க முடியாத அளவுக்கு பிரிந்து கிடக்கும் மூன்று சக்திகளை இணைத்துக் காட்டுகிறார், **"நாயுடு, நாயக்கர், நாடார்"**—என்னும் கட்டுரை மூலம்!

# கூண்டிற்கு வெளியே

மா பாவி! எப்படியடா மனந் துணிந்தாய் இந்த பாதகத்தை செய்திட, மனிதனா நீ! நினைத்தாலே நெஞ்சு திடுக்கிடுகிறதே-நாசகாலனே! நரகத்திலேகூட உனக்கு இடம் கிடைக்காதே! காட்டு மிருகங்கள்கூட கண்ணீர் சிந்துமே, உன் கொடூர செயலைக் குறித்து சீ! சீ! பயங்கர மிருகமே உன் முன்னால் நிற்பதே பெரும் பாவம்!

அய்யோ! கொடியவனே, உன் மனம் எப்படியடா இடங் கொடுத்தது. உன் அநீதி கேட்டால், கல்லும் கசிந்துருகுமே பாவி! அக்கிரமத்திற்கும் ஒரு எல்லையிருக்கிறதே அநியாயக்காரா! இதயமில்லாதவனே! இழிபிறப்பே! இங்கிருந்து போய்விடு!

இந்தக் கொடுமை புரிந்தவனைக் கண்ட துண்டமாக்க வேண்டும்; கைவேறு, கால் வேறாக பிய்த்து, காக்கைக்கும், கழுகிற்கும் இரையாக்கவேண்டும்! இல்லை இல்லை, உயிர் துடிக்கத் துடிக்க, அவன் உடல் துள்ளத் துள்ள, சித்திரவதை செய்ய வேண்டும். அந்த இரக்கமற்றவனை, எரிகின்ற அனற் குண்டத்திலே வாட்ட வேண்டும். அக்கினித் திராவகத்தை அவன் தலையிலே அள்ளி ஊற்ற வேண்டும். பயங்கர மனிதனே! இன்னும் நீ உலவிக் கொண்டிருப்பது சமுதாயத்திற்கு ஆபத்து!

★

இப்படி நெருப்பு வார்த்தைகளை அள்ளி அள்ளி வீசுகிறது; சமுதாயம்! அனல் பறக்கும் விழிகளுடன், கண்டனங்களை அவன் மேல் உமிழ்கின்றனர் மக்கள்! எப்பக்கம் திரும்பினாலும், 'பாவி, பாதகா,' என்ற குரல்கள் அவன் இதயத்தைத் துளைக்கின்றன. அவன் உள்ளமோ கொந்தளிக்கும் கடல், குமுறும் எரிமலை! கோரப் புயலாகி விட்டது.

கோபுரம் போல கண்டனங்களைக் குவித்து அவனைக் கூண்டிலே நிறுத்தக் கூட அல்ல அவன் நெஞ்சை கூறு கூறாகப் பிளந்து, குள்ளநரிக்கும், கூளிக்கும் இரையாகச் சொல்லுகிறது நாடு!

அவனைக் குற்றவாளியாக்கி விலங்கு மாட்டி, சிறையிலே அடைத்து வைத்திருக்கிறார்கள், சட்டத்தைக் கையிலே ஏந்தி நிற்பவர்கள்!

அவனோ-தன் சாவிற்கு நாள் கணித்துக் கொண்டிருக்கிறான்! அதற்காக கொஞ்சமும் அவன் கவலைப்படவில்லை! சாவை அணைத்துக் கொள்ள அவன்எப்பொழுதோ தயாராகி விட்டான்!

கருணை மனு போடவோ, கண்ணீரைக் காட்டி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளவோ அவன விரும்பவில்லை!

வாழ்க்கை அவனுக்கென்ன உல்லாச ஓடமா? உயிரைக் கட்டிப் பிடித்துக் கொள்வதற்கு! தங்கம் விளையும் தரணியைவிட்டு, வயிறு வளர்க்க சிங்கப்பூருக்கு கப்பலேறினானே, அன்றே அவனுக்கு உயிர் மேல் இருந்த ஆசையும், வாழ வேண்டும் என்ற எண்ணமும் வற்றி விட்டது!

'கடல் கடந்து சென்றாயே மகனே! அங்குமா வாழ்வில்லை! திரும்பி வந்துவிட்டாயே!'—இப்படி, அவன் தாய் அழுதபோது வாழ வேண்டும் என்று கொஞ்ச நஞ்சம் இருந்த ஆசையும் போய்விட்டது! அவனைச் சுற்றிலும் ஒரே அந்தகாரம்! இருள் சூன்ய வெளியில் தவித்துக் கொண்டிருந்தான்!

எல்லையில்லாத பயங்கரக் காட்டில் கண்களைக் கட்டி விடப்பட்டவனைப் போல, இந்த 'பாரத' நாட்டில் அலைந்து கொண்டிருந்தான்! அவன் வேலை கேட்காத இடமில்லை. வேதனையை எடுத்துக் கூறாத ஆளில்லை! அப்பொழுதும் அவன் துயர் துடைக்க யாருமே முன் வரவில்லை!

தனக்கு உயிர் கொடுத்தவளின் விழிகள், வற்றாத நீரோடையாகி விட்டிருப்பதைக் கண்டு குமுறினான்!

கொந்தளிக்கும் அலைகடலாயிற்று அவன் உள்ளம்!

'அம்மா!' என்பான்! இவன் 'என்னடா மகனே! என்பாள் தாய்! அதற்குமேல் அவர்கள் பேசுவது கிடையாது! புல் முளைத்த அடுப்பையும், பூனை உறங்கும் அடுக்களையையும் பார்த்து அவன் நெஞ்சு திடுக்கிடுவான் தாயின் கண்களிலோ கண்ணீர் பொங்கும்! அதைக் காண சகிக்காமல் 'அய்யோ அம்மா' என்று கதறியபடியே கைகளால் முகத்தை அறைந்து கொண்டு வீட்டை விட்டு வெளியேறி விடுவான்! இப்படி பிரேத மனிதனைப்போல அலைந்து கொண்டிருந்தான்.

வாழமுடியும் என்ற நம்பிக்கை எட்டாத நிலவாக இருந்த போதுதான் அவனுக்கு ஒரு கூலி வேலை கிடைத்திருக்கிறது! லாரிகளில் மூட்டை ஏற்றுவது, இறக்குவது; கூப்பிட்ட குரலுக்கு கைகட்டி நிற்பது; சுற்றிவிட்ட பம்பரம் போல் பகலெல்லாம் உழைப்பது; கதிரவன் விழுந்ததும், அவன் கையிலே விழும் சில நிக்கல் நாணயங்களை எடுத்துக் கொண்டு, புதையல் கிடைத்த

# குற்றவாளிகள் !

னைப்போல தாயிடம் ஓடுவது! 'அவன் குடியிருந்த' அவள் வயிற்றைக் குளிர்விப்பது, இப்படி சில காலம் நாட்களை உருட்டிக் கொண்டிருந்தான்.

வாழ முடியும் என்று திடீரென அரும்பிய இந்த நம்பிக்கையும், 'பலிக்கடா விற்த' அருகம்புல் தரப்படுகிறதே அதைப் போலத்தான் முடிந்தது! இந்த பரிதாபத்திற்குரியவனுக்குக் கிடைத்த கூலி வேலையும்!

இவனுடன் பணியாற்றிய—இவன் இனத்தைச் சேர்ந்த தொழிலாளர்களே இவன் நம்பிக்கையை கருக்கிவிட்ட நெருப்புத் துண்டுகளாக மாறி விட்டனர்.

வாழ்வைத் தேடியலைந்து கொண்டிருந்த அந்த நிரபராதியின் மீது திருட்டுக் குற்றத்தை சுமத்தி அங்கிருந்தும் அவனைத் துரத்தி விட்டனர்.

வாழ்க்கையோடு போராடிக் கொண்டிருந்தபோது புதிதாக கிடைத்த 'திருட்டுப் பட்டத்தையும்' அவனால் தாங்க முடியவில்லை! தன்மானத்தையே பாதிக்கின்ற இந்த பழிசொல்லை சுமந்து கொண்டு, உலவ அவன் விரும்பவில்லை! என்ன இருந்தாலும் தமிழினத்தில் பிறந்தவனல்லவா? எனவே மானத்தை இழந்து அவன் உயிர் வாழ விரும்பவில்லை; துணிந்து ஒரு முடிவுக்கு வந்துவிட்டான்!

★

'அம்மா!'

என்னடா மகனே!

'நாம் இருவரும் இன்று கோயிலுக்கு போய்வர வேண்டும்!'

'வழ்க்கத்திற்கு மாறாக இருக்கிறதே தம்பி உன் பேச்சு!'

'வாழ்க்கைக்கே மாறானது தானம்மா! எத்தனை நாள் இந்த கொடுமையை சகிப்பது! ஆண்டவனிடம் சென்றுவது முறையிடலாம் வா—அம்மா!

'எப்பொழுது மகனே உனக்கிந்த நம்பிக்கை உதயமாயிற்று!

'நம் கண்ணீரைக் கண்டு, 'ஐந்தாண்டு திட்டங்கள்' கவலைப்படாவிட்டாலும் அந்த கற்சிலையாவது கண்ணீர் சிந்தும். வாங்கம்மா, உடனே போய் வருவோம்!'

மகனுக்கு, தெய்வ நம்பிக்கை உண்டாய்விட்டது; இனி ஆண்டவன் அருள்பாலிப்பார், வயிற்றுப் புயலும், வாழ்க்கைப் புயலும் இனி ஓய்ந்துவிடும். திக்கற்றவர்களுக்கு தெய்வம் தானே துணை! எனவே!... கடவுள் கண் திறப்பார்! கை கொடுப்பார்! என்று நம்பினாள் அந்த பரிதாபத்திற்குரியவள்.

அவசர அவசரமாக கோயிலை நோக்கி நடந்தாள், மகன் பின் தொடர்ந்தான்.

மாரியம்மன் கோயிலது! மாதா மகமாயிக்கு முன் தலை வணங்கி நின்றான்!

'உலக மாதா—உன் பாதங்களைத் தஞ்சமடைந்திருக்கும் என் மகனைப் பாரம்மா! பராசக்தி, எங்களுக்கு வாழ்வளி தாயே!' இப்படியெல்லாம் அவள் அன்னையை வேண்டிக் கொண்டிருந்தாள்!

★

'பாடுபாவி என்ன காரியம் செய்யத் துணிந்தாய்! அட, இரக்கமற்றவனே!'

அவன் மனம் பேசிற்று!

'பயித்தியக்காரா இதென்ன பெரியகாரியம். தாயை மட்டும் தானே கொல்லப்போகிறாய் நீ-தாயோடு, என்தாரம், அவள் வயிற்றிலே தழைத்த தளிர்கள், இத்தனை பேரையும், ஆண்டவனுக்காக கொன்று குவித்தேனே நான்! என்னை விடவா நீ இரக்கமற்றன்!' என்று கூறியபடியே கோட்புலி நாயனார் சிரித்தார்.

'அய்யோ மகனே, என் வயிற்றுப் பசியை அடக்க முடியாமலா—என்னைக் கொன்று போடப் போகிறாய்!' நீர்வழியும் கண்களோடு அவன் தாய் ஓலமிடுவது அவன் மனக்கண் முன் தெரிந்தது.

'என் தந்தையைக் கொன்று விட்டு-என் தாயின் தங்க உடலைத் தழுவ நினைத்தேனே அப்பொழுதும் இப்படித்தான் ஓலமிட்டாள் அவளும், நான் என்ன ஏமாளியா. விருந்துண்ட பிறகு தானே அவளை விட்டேன்' — இப்படிக் குரல் எழுப்பினான் மோட்ச சாம்ராஜ்யத்திலே 'பூணூலை' உருவியபடியே உட்கார்ந்திருந்த ஒரு மனிதன்.

'அக்ரமக்காரா நிறுத்து, நீ உயர்த்திப் பிடித்திருக்கிறாயே கொடுவாள்; அதன் கீழே உன் தாயின் உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கிறதடா பாவி! உன் தாயின் உயிர்!' அவன் மனம் அவனை மிரட்டியது; நெஞ்சு அலைமோதிற்று!

'எதைச் செய்யவும் உள்ளத்தில் உறுதிவேண்டும், மனிதனே! மனசாட்சிக்கு நான் அஞ்சியிருந்தால், பெற்ற பிள்ளையையே கறி சமைத்து, விருந்தாக்கி இருக்க முடியுமா?' என்று சிறுதொண்டர் அவனை கேட்டார்!

அவன் நெஞ்சத்திலே அனல் கூத்தாடிற்று. நெருப்புக் குண்டம் போல் தீ ஜுவாலைகள் கொழுந்து விட்டெரிந்தன இடியும், மின்னலும் அவன் சிந்தையைக் குழப்பிற்று!

கைகளை ஓங்கினான், ஒரே வெட்டு, தாயின் தலை உடலை விட்டுப் பிறிந்து விட்டது;

'அய்யோ அம்மா!' அந்த கோயில் மண்டபத்தில் அவன்

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

★ **பாலு சகோதரர்கள்** — ஓவியக் கூடத்தை விட தலைப் போருக்கான படைக் கலன் தயாராகும் உலைக் கூடமாக மாற்றியிருக்கும் பாலு சகோதரர்கள் 'லியனர்டோடாவின்வி' என்னும் ஓவியப் பெருந்தகையின் பெருமை பற்றி வரைகிறார்கள்.

★ **பராங்குசம்** — பேசுர் போதக் குழுவிற்குப் பிறகு பகைவர் முகாமிற்குப் பேரிடியைக் கொடுத்திருக்கும் நம் தொழிலாளர் திட்டம் பற்றி அரியதோர் கட்டுரை தருகிறார், 'தொழிலாளர் அரங்கில் நாம்' என்ற தலைப்பில் !

★ **டைரக்டர் காசிலிங்கம்** — சினிமாவை நல்ல கொள்கை பாடும் சிந்தாக மாற்ற வேண்டுமென்கிறார், 'தமிழ்ப் படம்' பற்றி உணர்ச்சிமிக்க வரிகளை எழுதும் டைரக்டர் காசிலிங்கம் !

★ **பி. சி. கணேசன்** — பொங்கல் வந்துவிட்டது; பூரிப்பு துள்ளி விளையாடும் என எதிர்பார்த்த மங்கை நல்லாள் மஞ்சள் இழக்க வேண்டியிருந்த சோகக் கதையைத் தீட்டுகிறார் அருமை நண்பர் பி. சி. கணேசன் !

★ **இராதா மணாளன்** — திப்புவின் காலத்தில் நடந்த காதல் கதையொன்றை, கவின் ஒழுகும் நடையில் செப்புகின்றார் தோழர் இராதா மணாளன் !

## தென்னவன் காதை

★ **கருணாநிதி** தரும் எழுச்சி வரிகள்; கவிதை நடையில் வார்க்கப்பட்ட போர்க் காதை !

ஐயிரண்டு திசை முகத்தும் தன் புகழை வைத்து, துண்டிரண்டாய் பகைவர் கூட்டத்தைப் பிளந்தெறியும் தமிழர் மூதாதையின் உயிரோவியம் !

கனல் மிகு கண்ணும், கனிவுகொள் நெஞ்சும், எதிர்ப் படையைப் பஞ்சுபஞ்சாய்ப் பிய்த்தெறியும் தெம்பும், புறமுதுகு காட்டாப் பண்பும் கொண்டோனை ஈரமில்லா இழிகுணத்தான் ஒருவன் கோணல் வழியிலே கொன்று போட்டு, மானம் மறந்தவருள் முதல்வனானக் காட்சியை அழ அழச் சொல்லும் அற்புத விளக்கம் !

## கிரேக்கப் பெரியார்

எழில்மிகு ஏதான்ஸ் நகரத்து ஏந்தல் சாக்ரடீசின் இல் வாழ்வும் அவனைச் சுற்றிக் கிளம்பிய வயிற்றெரிச்சல்காரர்களின் சதித்திட்டமும்-கிரேக்க நீதி மன்றம் பற்றிய புதிய விளக்கங்களும்-மிகமிகப் புதிய—முற்றிலும் மாறுபட்ட நடையில் கருணாநிதியால் வரையப்பட்டிருக்கிறது, வரலாற்றுச் சுவை குறையாமல்!

## பரதாயணம்

காடேகிய ராமனைத் தொடர்கிறான் பரதன்! ஏன்? எதற்காக? இந்தக் கேள்விக்கு அருமையானதொரு விடையை கேலிச் சித்திரமாகத் தீட்டி நகைச் சுவைச் சுரங்கமென ஆக்கியிருக்கிறார் 'பரதாயணத்''தை! இதுவும் கருணாநிதியின் எழுத்தோவியமே!

## அரும்பு

படித்தவுடனே உங்கள உள்ளத்தில் புத்துணர்வு அரும்பிடச் செய்யும் குடும்பச் சித்திரம்—பிஞ்சு உள்ளங்களின் மனப் போராட்டத்தை அழகுபட சித்தரிக்கும் எழிலோவியம் மு. க. தீட்டும் பெருங் கதை.

மற்றும், பேராசிரியர் சண்முகசுந்தரம், கருணானந்தம், இ. மனோகரன், ப. உ. சண்முகம், இளம்பரிதி, கா. பாண்டுரங்கன், முடியரசன், ரவி, வாணிதாசன், முல்லை-சத்தி, ஏ. கே. வில்வம் ஆகியோர், எழுதுகின்றனர்.

முக்கனி, முத்தமிழ், முக்கோடி, என வாழ்ந்த பழைய தமிழகத்தின் படப்பிடிப்பு, மிகப்புச் சித்திரமாக அமைக்கப் பட்ட அழகோவியத்தை சாந்தி ஆர்ட்ஸ், மாதவன் தீட்டியிருக்கிறார்.

ஓவியர் மாதவன் தீட்டியிருக்கும் தமிழகத்தின் காட்சி!

மூவண்ணத்தில் ஓவியர் ஜி. எச். ராவ் தரும் அண்ணா-காவலர் படம்!

திரையுலக கலை டைரக்டர் தெலுங்கு தேசத்து 'தோட்டா' தீட்டிய நிலமடந்தைச் சித்திரம்!

முரசொலி செல்லப்பன் பக்கத்துக்குப் பக்கம் அள்ளித் தெளித்திருக்கும் ஓவியத் துணுக்குகள்!

இத்தனையும் கொண்டு, திகட்டாத காவியத் தேனை மொண்டு, நீங்கள் கண்டு களிக்க பொங்கலன்று வருகிறது முரசொலி மலரென்னும் சங்கத்தமிழ்க் கற்கண்டு!

★ 7-ம் பக்கத் தொடர்ச்சி

...டும் என்றீரே-அது எப்படி' ...ன்றான் கிளைவ்.

'அதைப் பற்றியெல்லாம் ...லை வேண்டாம உங்களுக்கு' ...ன்று கூறிவிட்டு அருகிலிருந்த ...ரு ஆலயத்திற்கு கிளைவை ...ழைத்துச்சென்றார் தீட்சதர். ...றுமுற்றும் பார்த்தபடியே ...வ் சற்று விழிப்பாகவே ...ட்சதரைப் பின் தொடர்ந் ...ன். இருண்டு பாழடைந்து ...ந்த அந்த கோயிலினுள் ...ன்றதும், சுவற்றிலே ...ருத்தப்பட்டிருந்த ஒரு ...லைப் பெயர்த்தார் தீட்சதர். ... நுழைந்து போகின்ற ...விற்கு ஒரு வழி தெரிந்தது.

'இதோ தெரிகிறதே இந்த ...ரங்கப்பாதையிலே நுழைந் ...ல் நீங்கள் கோட்டைக்கு ...புறம் வந்துவிட முடியும். ...ளை நள்ளிரவு—சரியாக பனி ...ண்டு மணிக்கு-கோட்டைக் ... உம் சேனைகள் வந்துவிட ...ண்டும்! பிறகு நடக்கவேண் ...தற்கு நான இருக்கிறேன்' ...று சற்று பெருமையோடு ...க கொண்டார் தீட்சதர்.

தன் வெற்றிக்கு வழிகாட்ட ...வரை வாயார வாழ்த்தி ...மாரப் பாராட்டி, அவர் ...லே தட்டிக்கொடுத்தான் ...வ்.

...ற்களெல்லாம் வெளியில் ...யும்படி-கோரமாக சிரித்து ...டு விடை பெற்றுக்கொண் ... கோவிந்த தீட்சதர்.

★

...வலங் காடடிற்கும் கோட் ...யின் உட்புறத்திற்கும் ...மாக அமைக்கப்பட்டி ... அந்த சுரங்கப்பாதையின் ...ப்புற வழியை அடைத்து ...ு. கோட்டையை ...முறை சுற்றிப் பார்த்து ...டு வேலப்பன் அருகிலிருந்த ...யில் நுழைந்து அங்கே ...மணத்திட்டின் மீது ...கார்ந்தான். 'வேலப்பா' ...று அழைத்தபடியே ...ந்த தீட்சதர் அவன் ...கிலே வந்து 'என்ன வேலப் ...'உடம்பிற்கு' என்று அக்கரை ...டு விசாரித்தார்.

'ஒன்றுமில்லை, வேலை அதிகம் ...ஞ்சம் இளைப்பாறலாம் ...று இப்படி வந்தேன்' ...ன் வேலப்பன்.

'கோட்டையே உன் தலை ...ன்னு சொல்லு' என்று ...விட்டு மோசமாச் சிரித்தார் ...சதர்.

...ன் சேனாதிபதி இருக்கிறார், ...டையின் தலைமை ...காரி அவர்தானே'!

...மாம் தலைமை அதிகாரி— ...லுப்பில்லாதவன்!' என் ...ஷமறிந்த தீட்சதர்.

★

...மை அதிகாரி தானப்ப ...ம் வேலைப்பனுக்கும் நெடு ...கை! ஒருமுறை தர்பா ...து வேலப்பனிடம் ...ரியாதைக் குறைவாக ...ன் நடந்து கொண் ... என்பதே அதற்குக் காரணம். அன்றுமுதல் அவன் கழுத்திற்கு குறி பார்த்துக் கொண்டிருந்தான் வேலப்பன். ஒரே ஒரு நாளாவது தர்பாரிலே தலைமை அதிகாரியின் ஆசனத்திலே உட்காரவேண்டுமென்ற 'ஆசை' அவன் நெஞ்சத்தை அரித்துக் கொண்டிருந்தது. இந்த விஷயத்தை அறிந்திருந்த தீட்சதர், சமயம் பார்த்து அஸ்திரத்தை ஏவினார்!

தனக்கு வேண்டாத தானப்பனைப் பற்றி தீட்சதர் குறைவாகப் பேசவே—வேலப்பன் சந்தோஷப்பட்டான். 'என்ன வேலப்பா 'யுத்த புஸ்தி'செல்லாம் எப்படி இருக்கிறது. சந்தா சாகிப் வந்தவாசிக்குப் போயிருக்கிறாரே!' என்று ஆரம்பித்தார் தீட்சதர்.

'ஆமாம் அவருக்கென்ன சுக போகம்! கொஞ்சமாவது அக்கரை இருந்தால்தானே—எல்லாம் இந்த தானப்பன் சொல்லைக் கேட்டு நவாப் ஆடுகிறான்' என்று சலித்துக் கொண்டான். வேலப்பனின் நெஞ்சத்திலே வளர்ந்திருக்கும் குரோதத்தை சாதகமாக்கிக் கொண்டார் தீட்சதர்.

'வேலப்பா விஷயமறியாத வாலிபனாய் இருக்கிறாயப்பா நீ! நேராகவே சொல்லிவிடுகிறேன் நீ நம்பவேண்டும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஏதோ உன் மேல் எனக்கு ஒரு அன்பு; அதனால் தான் ஓடிவந்தேன். எல்லாருமா சேர்ந்து உனக்கு குழி வெட்டப் போறாங்க—'என்று தீட்சதர் கூறியதும் திடுக்கிட்டு துள்ளி எழுந்தான்; அவனையறியாமல் அவன் கை இடையிலே இருந்த உடைவாளைப் பற்றியது. அவசரப்படாதே வேலப்பா! நான் சொல்லப்போவதை எல்லாம் நன்றாகக் கேள்! அதற்குப் பிறகும், என்னிடம் நம்பிக்கையில்லை என்றால், இங்கேயே இந்த ஏழை பிராமணனை பிணமாக்கிவிடு! என்று பீடிகை போட்டுவிட்டு'வேலப்பா! ஏன் என்று கேட்காமல் என்னுடன் புறப்பட்டுவா' என்று எழுந்தார். அதற்கு பிறகு இருவருமாக சுரங்கப்பாதை வழியாக நுழைந்து நாவலங் காட்டிற்கு வந்து சேர்ந்தார்கள்.

'வேலப்பா இதோ நிற்கிறோமே — இதே இடத்திலேதான் நேற்று நான் ராபர்ட் கிளைவை பார்த்தேன்'

'கிளைவைப் பார்த்தீர்களா? ஆகா! அவன் மட்டும் என் கையில் சிக்கியிருந்தால் மண்டையை நொருக்கி இருப்பேன்' என்று பற்களை நறநற வென்று கடித்தான் வேலப்பன்.

'வேலப்பா அதற்குள் அவசரப்படுகிறாயே —தலைகனம் பிடித்தலையும் தானப்பன் மண்டைதான் முதலிலே நொருக்கப்படவேண்டும் என்று தீட்சதர் கூறியதும்; 'ஆமாம்' என்று வேகமாக தலையசைத்துவிட்டு சற்று தயங்கினான் வேலப்பன்.

'உன் புகழ் கிளைவின் காதுகளுக்குகூட எட்டியிருக்கிறது வேலப்பா! ஆனால் அந்த தானப்பன் மேல் உனக்கிருக்கிறதே ஆத்திரம், அதைவிட அதிகமாக இருக்கிறது கிளைவிற்கு என்பதைக் கேட்டால் நீ ஆச்சரியப் படுவாய்' என்று தீட்சதர் கூறியதும்.

'ஆப்படியா...! என்று வாய் பிளந்தான் வேலப்பன்.

நல்ல சமயம் என்பதை அறிந்து கொண்ட தீட்சதர், வேலப்பா இதை கவனமாகக் கேள்! நாளை இரவு கிளைவின் படைகள் கோட்டையைவளைத்துக்கொள்ளும். அதே சமயத்தில் சுரங்கப்பாதை வழியாக வெள்ளையர் சேனை வெள்ளம் போல் கோட்டைக்குள் புகுந்துவிடும்! முதலில் தானப்பனைத் தீர்த்து கட்டவேண்டும்; கொடி மரத்திலே பறந்துகொண்டிருக்கும் நவாபின் கொடி தரையிலே சாயும், அதோடுமட்டுமா, பொன்னும் — பொருளும் உன் காலடியிலே! சொன்னதைச் செய்ய ஆட்கள்! அரசபோகம்! கிளைவின் கைலாகு! இத்தனையும். இப்படி தீட்சதர் கூறியபோது,

'துரோகமா?' என்று அதிர்ச்சி அடைந்தவனை போலக் கேட்டான் வேலப்பன். அதற்குப் பிறகு அவர்கள் அதிக நேரம் பேசிக் கொண்டிருக்கவில்லை; இரவு நெடு நேரத்திற்குப் பிறகு வேலப்பன் வீடு திரும்பினான். அன்றிரவெல்லாம் அவன் படுக்கையில் புரண்டு புரண்டு படுத்தான். அவன் நெஞ்சிலே ஆயிரம் எண்ணங்கள் குதித்து போராடிக் கொண்டிருந்தன. சொக்கம்மாளின் கேள்விகளுக்குக்கூட, சரியாக பதிலளிக்கவில்லை வேலப்பன்; அவன் மாற்றத்திற்கு காரணம் தெரியாமல் திகைத்துக் கொண்டிருந்தாள் சொக்கம்மா!

★

அன்றிரவு, ஊரெங்கும் ஒரே ரகளை! கோட்டைப் பக்கம் இருந்து கிளம்பிய பயங்கர சத்தமும், பீரங்கி முழக்கமும் ஊரைக் கலக்கிற்று! மூலைக்கு மூலை மக்கள் கூக்குரல் இட்டு ஓடினர்; தடை இல்லாத வெள்ளம்போல், கிளைவின் பட்டாளம் ஆர்க்காட்டை சூறையாடிற்று! எங்கும் அழுகுரல்; ஒப்பாரி, ஓலம்!

★

ஊர் அமர்க்களப் பட்டுக் கொண்டிருக்கும் இதே நேரத்தில் கோட்டையின் ஒதுக்குப் புறத்திலே கோவிந்த தீட்சதரும், வேலப்பனும் பதுங்கிக் கொண்டிருந்தார்கள்!

கையிலே உருவிய வாளோடு யாரையோ தேடிக் கொண்டலைந்தான் ஒரு வீரன். கோட்டையின் ஓரமாக அவன் சென்று கொண்டிருக்கும் போது, யாரோ இருவர் பேசிக் கொண்டிருக்கும் குரல் கேட்கவே சற்று நின்றான். செவிகளைத் தீட்டிக் கொண்டு உற்று கேட்டான். திடீரென்று பேச்சுக் குரல் நின்று காலடி ஓசை கேட்கவே, அந்த வீரன் சுவறோடு சுவராக பதுங்கி நின்றான். ஒரு வினாடி...வாளின் சலசலப்பு! 'ஐயோ' என்று அலறிக் கொண்டு வேலப்பன் கீழே சாய்ந்தான்! 'கூலிக்கு கத்தி தூக்கும் பட்டாளத்து வீரனே! உனக்கா தாலி கட்டினேன்; துரோகியே இன்றோடு தொலைந்து போ!' என்ற சொக்கம்மாளின குரல் அந்த கோட்டையின் மதிற் சுவறுகளில் மோதி எதிரொலித்தது! இதைக் கண்டு திடுக்கிட்டு ஓடிய தீட்சதர் காலிடறி அகழியிலே விழுந்த-அலைந்து கொண்டிருந்த முதலைகளுக்கு விருந்தானார்!

'மானங் கெட்டவனே! உனக்கு மனைவியாக இருந்தேனே—அதற்காக நானும் சாகிறேன்!' என்றுவிழிகளில் அனல் பறக்க கூறிவிட்டு, கையிலே இருந்த உடைவாளை தரையிலே நிறுத்தி அதன்மேல் விழுந்தாள் சொக்கம்மா! அவள் மார்பிலே இருந்து ரத்தம்குபு,குபு,வென்று பெருக்கெடுத்து ஓடியது. கணவனைக் கொன்றுவிட்டோம் என்ற கவலையல்ல! சமுதாய விரோதி ஒருவனை தொலைத்துவிட்டோம்! என்ற களிப்போடு சொக்கம்மா உயிர் விட்டாள்!

சிப்பாய் உடையிலே செத்துக் கிடந்த அந்த தமிழச்சியின் பிணத்தை மிதித்தபடியே வெள்ளையர் பட்டாளம் சென்று கொண்டிருந்தது.

★

## 'சாக்ரடீஸ்' கிடைத்து விட்டான்!

'கிரேக்கம் ஒரு சாக்ரடீசைக் கொன்று போட்டது. இதுவரைத் தேடிக் கொண்டிருக்கிறது அதற்கு ஒரு சாக்ரடீஸ் கிடைக்கவில்லை' இப்படி அடிக்கடி கூறுவார் மாணடுமீபான அழகிரிசாமி; ஆனால் சென்ற கிழமை வெளி வந்த நாளேட்டு செய்தியொன்று, சாக்ரடீசை நமக்கு நினைவு படுத்துவதாக இருக்கிறது.

பயங்கரக் குற்றவாளி என்று கருதப்பட்ட ஒருவன், அம்பாலா சிறையிலே கைதியாகக் கிடந்தான்- ஒருநாள் சிறைக் கதவுகளை மூடுவதற்கு மறந்துபோய் காவலாளிகள் கண்ணயர்ந்து தூங்கிவிட்டனராம்! கைது செய்யப் பட்டிருந்த அந்த பயங்கரக் குற்றவாளிக்கோ-தப்புவதா? வேண்டாமா? என்ற மனப் போராட்டம் சுமார் நான்கு மணி நேரமாக நடைபெற்றிருக்கிறது; கடைசியில் உறங்கிக் கொண்டிருந்தகாவலாளிகளை எழுப்பி 'சிறைக் கதவுகளை மூட மறந்து விட்டீர்களே ஐயா!' என்று கூறினானும் அந்த கைதி!

முரசொலி

# மறவர் மாணிக்கம்!

ஏ. கே. வில்வம்

சொக்கம்மா வேலப்பனின் அத்தை மகள்!

கி. பி. 1750!

இந்திய மண் யாருக்கு சொந்தம்! உனக்கா எனக்கா? என்று வெள்ளையரும் பிரஞ்சுக்காரர்களும் தோள் தட்டிக் கொண்டிருந்த காலம் அது! வெள்ளைக்காரர்களுக்கே உரித்தான அந்த 'பிரித்தாளும் சூழ்ச்சி'க்கு தென்னாட்டு குட்டி ராஜாக்கள் பலியாகி கோட்டைக்குள்ளேயே குத்துவெட்டு நடத்திக் கொண்டிருந்தனர்.

யாராண்டால் நமக்கென்ன-சோறு வந்தால் போதும் என்ற 'அரிபாய கண்ணோட்டம்' கொண்ட சில தமிழகத்து சிப்பாய்களும் — வெள்ளைக்காரன் படையிலே சேர்ந்து கொண்டு, கூலிக்குகத்தி தூக்கப் புறப்பட்டு விட்டனர். இத்தகைய சூழ்நிலையிலேதான் 'பிளாசி' வெள்ளைக்காரர்களுக்கு கைலாகு கொடுத்தது! ஆற்காடு தன் கோட்டைக் கதவுகளைத் திறந்து விட்டு 'பூர்ண கும்பம் காட்டி' வரவேற்பு வழங்கிற்று. வற்றாத பழியையும் சுமந்துகொண்டது. தங்கள் தன்மானத்தை விலை கேட்க வந்த வெள்ளைக்காரர்களுக்கு சோறு படைத்து விட்டு—'எங்களுக்குக் கஞ்சியே போதும் கனவான்களே!'— என்று கூறும் அளவிற்கு மக்களிடையே அடிமை எண்ணம் தலைகாட்டிற்று. நவாபின் ஏஜெண்டாக ஆற்காட்டிலே ஒரு குட்டி நவாப் அமர்த்தப் பட்டிருந்தான்.

அத்தரும்-ஜவ்வாதும் மணம் பரப்ப, அழகு சிந்தும் ஆடம்பரப்பொருள்கள் அணி செய்ய, ரோஜா நீரிலே குளித்து அந்த ரோஜாவின் நிறத்தை பொத்தஅழகிகளுடன்களித்து, கரிச்சோறும் — வேலைக்கொரு கண் வெட்டுக்காரியும் விருந்தளிக்க, அரண்மனையிலே 'நிக்கா புருஷனாக' கொலு வீற்றிருந்தான் அந்த குட்டிராஜா!

ஆர்க்காட்டு மண்ணிலே அடி எடுத்து வைக்க ராபர்ட் கிளைவ் துடித்துக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் இங்கே அரண்மனையில், துவளும் இடையைப் பிடிப்பதிலும், துடிக்கும் இதழை ரசிப்பதிலும், காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தான் சந்தாசாகிப்!

கோட்டையை வளைப்பதற்கு முன்னால்-ஐந்தாம்படையினரை உள்ளே நுழையவிட்டு நிலைமையை அறிந்து கொள்ள நினைத்தான், அதற்கான ஒரு படையையும் துரிதமாக தயாரிக்க திட்டமிட்டான் அந்த வெள்ளைத் தோல் 'சாணக்கியன்'!

இந்த நிலைமையில் பயங்கரப் போர் ஒன்று மூளப் போகிறது என்பதையும்-அதை எதிரித்து சமாளிக்க நவாபிற்கு திராணி இல்லை என்பதையும் புரிந்து கொண்ட மக்கள் தங்கள், வீடு வாசல்களை காலி செய்து விட்டு மூட்டை முடிச்சுகளோடு அக்கம்பக்கத்து ஊர்களுக்கு சென்று குடியேறிக் கொண்டிருந்தனர்.

★

அன்று பொர்ணமி! ஏகாந்தமான அந்த இரவில் முழுநிலா ஒளிபாய்ச்சிக்கொண்டிருந்தது. அந்த பொன்மழையில் நனைந்தபடியே கோட்டையை அடுத்திருந்த தென்னந் தோப்பில் நுழைந்து வேகமாக சென்று கொண்டிருந்தான் வேலப்பன். தென்னங்கீற்றுகளின் வழியாக தொங்கிக் கொண்டிருந்த நிலவொளிபட்டு-அவன் இடையிலே கட்டப்பட்டிருந்த உடைவாள் பளபளத்துக் கொண்டிருந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் வேலப்பன் அந்த தோப்பைக்கடந்து, தெருக்கோடியிலிருந்த ஒரு வீட்டின் கதவை படபடவென்று தட்டினான். போரின் பயம் ஊரைக் கலக்கிக் கொண்டிருந்ததால் சொக்கம்மா — வெள்ளைக்கார சிப்பாய்கள்தான் வந்து விட்டார்களோ, என்று வாரி சுருட்டிக்கொண்டு எழுந்தாள். அவள் நெஞ்சு 'படக்' 'படக்' என்று அடித்துக் கொண்டிருந்தது. 'சொக்கம்மா' என்று வேலப்பன் குரல் கொடுத்த பிறகே அவளுக்கு உயிர் வந்தது!

தூக்கத்தைக் கெடுத்து விட்டானே என்ற வருத்தத்தை விட, தனியாக தன்னை தூங்க விட்டானே என்ற கவலைதான் சொக்கம்மாளின் வார்த்தைகளில் கோபமாக உருவெடுத்துவந்தது.

'ராஜாவுக்கு தொரைத்தனம் இப்பதான்முடிஞ்சதோ' என்று சலிப்போடு கூறிக் கொண்டே கதவைத் திறந்தாள்;

'ஊர் நிலைமை உனக்கு தெரியாதா சொக்கம்மா — நம்ம கோட்டையை பிடிப்பதற்கு வாயபிளந்துகிட்டு இருக்கானுங்களேவெள்ளைக்காரனுங்க, இன்னிக்கோ-நாளைக்கோன்னு இருக்குது நிலைமை-எத்தனை தலைங்க உருளப் போவுதே இந்த பாலத்து மண்ணுலே... உம்...'என்று கூறி ஒரு பெருமூச்சு விட்டான் வேலப்பன்.

இதைக் கேட்டவுடன் சொக்கம்மாளின் முகத்திலே ஏற்பட்ட மாறுதலை-மங்கிய அந்த அகல் விளக்கின் ஒளியிலே வேலப்பனால் நன்றாகப் புரிந்து கொள்ள முடிந்தது.

'ஏன் சொக்கம்மா உம்முகம் திடீர்ன்னு மாறிப் போச்சு' என்று அவள் தோள்களைப் பிடித்து உலுக்கியபடியே கேட்டான் வேலப்பன்.

'உம்...ஒண்ணுமில்லே' என்று கூறிவிட்டு முகத்தில் சந்தோஷத்தை வரவழைத்துக்கொண்டாள் அவள்!

'அதெல்லாம் முடியாது—எதையோ நெனச்சிதான் உன் முகம் மாறிப் போச்சு. அதைச் சொன்னாதான் விடப்போறேன்' என்று கூறியபடியே சொக்கம்மாளை கட்டிப் பிடித்தான் வேலப்பன்.

அவன் அகன்ற மார்பிலே முகத்தை அணைத்தபடியே— 'அத்தான் சண்டையிலே வெற்றியோடு திரும்பிவரணும்; ரத்தக்கறை படிஞ்ச வாளோட என் அத்தானை என்னிடம் வரவேண்டும்' என்று கூறினாள்.

'ரத்தமா? அந்த பனிக்காட்டு சிப்பாய்ங்க உடம்பிலே அது எங்க இருக்கப் போவுது; சொக்கு! சண்டையில் உம் முகத்தை நெனைச்சிக்கிட்டா போதுமே—வெள்ளைக்காரனுங்க தலையெல்லாம் வெள்ளரிக்காயாக உருட்டி விடுவேனே!' என்று பெருமையோடு கூறி அவள் கன்னங்களை வலிக்காமல் கிள்ளிவிட்டான் வேலப்பன். மௌனகீதம் இசைக்க வேண்டிய நேரத்தை இனி மேலும் பேசிக்கழிக்க அவர்கள் விரும்பவில்லை. அந்த இருவரையும் இன்பத்தில் திளைக்கவிட்டு இரவு நலம் பாடிச் சென்றது!

★

கத்தியும் கையுமாக திரிந்து கொண்டிருந்த வேலப்பனுக்கு சொக்கம்மாளை கல்யாணம் செய்து வைக்க அவள் தந்தை மறுத்துவிட்ட போது-வேலப்பன் மனம் ஒடிந்து ஆர்காட்டு நவாபின் சேனையிலே சிப்பாயாகசேர்ந்து விட்டான். சின்ன வயதிலேயிருந்து 'அத்தான்' 'அத்தான்' என்று ஆயிரம்தடவை அழைத்தபடி வேலப்பனின் தோள்களில் கிளி போல் தொத்திக் கொண்டிருந்த சொக்கம்மாளுக்கு—அவன் பிரிவு வேதனையாக இருந்தது.

ஒருநாள் யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் வேலப்பனிடம் வந்துவிட்டாள். அதற்குப் பிறகுதான் 'சிறுசு'களின் ஆசையை வெட்டிப் பிரிக்கக் கூடாது என்ற 'ஞானோதயம்' ஏற்பட்டு — அவள் தந்தை வேலப்பனுக்கு சொக்கம்மாளை கல்யாணம செய்துவைத்தார். சொக்கம்மாள் வேலப்பனிடம் உயிரையே வைத்திருந்தாள். பகலெல்லாம் பட்டாளத்தில் பணியாற்றும் வேலப்பனுக்கு — இரவிலே சொக்கம்மாதான் குளிர்ச்சி தரும் நிலவு! அவள் கண்ணின் கடைப் பார்வையில் திளைத்திருக்கும்போது 'இந்த மண்ணில் எனக்கு நிகர் யாருமில்லை!' என்று கர்வத்தோடு கூறிக் கொள்வான். சொக்கியிடம் அவ்வளவு மயக்கம் அவனுக்கு!

★

சென்னையிலே தங்கியிருந்த ராபர்ட் கிளைவ்—ஐந்தாம் படைக்கு ஆள் திரட்டுவதற்கு முன்பே — ஆர்க்காட்டிலிருந்து ஒரு 'மனு' அவனுக்கு சென்றது!

கோட்டைக் கதவுகள் உடைபடாமல், நீண்ட மதில்கள் பொடிபடாமல், பீரங்கியின் இடிகுரல்கேட்காமலேயே, கோட்டையைப் பிடித்துவிட மார்க்கமிருக்கிறது என்றும், கிளைவ் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டால் கோட்டையின் கதவுகள் சுலபமாக திறக்கப்படும்' என்றும் அந்தகடிதத்திலே குறிப்பிடப்பட்டிருப்பதைக் கண்ட கிளைவ், தானே தேடிவரும் 'அதிருஷ்டத்தைக்' குறித்து பூரிப்படைந்தான்' கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததைப் போல மாறுவேடம் அணிந்து கொண்டு-பலாற்றின் எதிர்கரையிலே அடர்ந்து செழித்திருக்கும் நாலவங் காட்டில் இரண்டொருவீரர்களோடு வந்து தங்கி இருந்தான். ஒவ்வொரு விடியும் அவன் விழிகள் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருந்தன! அதே சமயத்தில் அவன் கை இடையிலே மறைத்து வைக்கப்பட்டிருந்த கை துப்பாக்கியை அடிக்கடி தொட்டுப் பார்த்துக் கொண்டிருந்தது.

இதயத்தைக் கருப்பாக்கிக் கொண்ட மேகமொன்று—நிலவொளியை மறைக்கவே திடீரென்று இருள் சூழ்ந்து கொண்டது. அவசரத்தையே காட்டிக் கொண்டிருந்த கிளைவின் கண்களுக்கு, அப்போது எதிரே வந்துநின்ற கோவிந்த தீட்சதரின் உருவம்கூட தெரியவில்லை.

'என்ன தளபதியாரே-வெகு நேரமா காத்திருக்கீங்களோ' என்ற தீட்சதரின் குரல் கேட்டு திடுக்கிட்ட கிளைவ் இடையிலே இருந்த கைதுப்பாக்கியை எடுத்து குறிபார்த்துவிட்டான்! அப்பொழுதுதான் மேகக்கட்டியிலிருந்து புரண்டு விழுந்த ஒளி நிலா-தீட்சதரின் உயிரைக்காப்பாற்றிவிட்டது. மாமிச மலை போல் நின்று கொண்டிருந்த தீட்சதரின் உடலெல்லாம் வியர்த்து நடுநடுங்கிக் கொண்டிருந்தது. சாகசக்காரன் கிளைவ் தீட்சதரின் முதுகைத் தட்டிக் கொடுத்தபடியே வந்தகாரியத்தைப் பற்றி பேச்செடுத்தான். கோட்டையைக் கைப்பற்ற தன் உதவி தேவை என்றால், பொன்னும்—பொருளும்—போதுமானநஞ்சையும்-தனக்கு மான்யமாக எழுதித்தரவேண்டுமென்று உறுதிமொழி கேட்டார் தீட்சதர்!

'இவ்வளவுதானே-இப்பொழுதே கொடுத்துவிட்டதாக கருதிக் கொள்ளுங்கள்! தீட்சதரே கோட்டைக் கதவுகள் திறக்கப்

★ தொடர்ச்சி 6-ம் பக்கம்

# 'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(●) இரா. பிச்சை,
தியாகராயர் கல்லூரி,
மதுரை.

சதாசிவம்; பசுவப்பாளையம்.

(?) நேருவுக்கு நெற்றிக்கண் இருந்தால்?

'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' என்று கூறும் நக்கீரர்களாக நாமிருப்போம்!

(●) இரா. பிச்சை; தியாகராயர் கல்லூரி, மதுரை.

(?) புயலால் யாருக்கு யோகம்?

சுமார் ஆயிரம் ஏழைகளுக்கு! அதாவது மரண யோகம்!

ச. முத்துசாமி; சத்திரப்பட்டி.

(?) கோயில் ஒரு விபசார விடுதி என்று காந்தி கூறிய பிறகும் அவரது சீடர்கள் கோயிலுக்குப் போவானேன்?

காந்தியார், அந்த உண்மையைச் சொன்ன பிறகுதான் கோயில்களில் கூட்டமே அதிகமாகி விட்டது தோழரே!

எஸ். கே. வடிவேல்; வாடிப்பட்டி

(?) சீதையைப் புகழும் ஆச்சாரியார், கண்ணகியைப் புகழாத காரணம் என்ன?

சிலப்பதிகாரம் எழுதிய இளங்கோவடிகள், ஆரியருமல்ல, ஆரியத்தின் அடிமையுமல்ல! அதனால்தான்!

துரை முருகேசன்; காரமடை.

(?) ரஷ்யத் தலைவர்கள் நெற்றியிலே திலகமிட்டது இந்து மதத்திற்குப் பெரிய வெற்றி தானே?

இராவணனின் முகத்திலே முத்தமிட்டது சீதைக்குப் பெரிய வெற்றி என்று கூறினால், இரஷ்யத் தலைவர்களுக்குத் திலகமிட்டதும் இந்து மதத்திற்குப் பெரிய வெற்றிதான்!

(?) நேருவின் ஐந்து மண்டல கொள்கை பற்றி உமது அபிப்பிராயம் என்ன?

ஐவருக்கும் ஒரே திரௌபதையாக—அதிகாரச் சக்கரத்தை நேருவே வைத்திருக்கலாமென்று கருதுகிறார், அவ்வளவுதான்!

எம். அப்துல் சரீப்; சென்னை-6.

(?) விடுதலை பத்திரிகை நாள்தோறும் தி. மு. கழகத்தை வசைமாரி பொழிகிறதே: காரணம் என்ன?

போதுத் தேர்தலுக்கான ஆரம்ப வேலை அது! அவ்வளவுதான்!

ஏ. ஹகீம்; அரசண்டநல்லூர்.

(?) நேரு அதிகமாய் ரசிப்பது எது? வெறுப்பது எது?

ரசிப்பது:—

தென்னாட்டைப் பொறுத்தவரையில் சுப்புலட்சுமி வழங்கும் இசைத் தென்றலை!

வெறுப்பது:—

புயலின் விளைவைப் பார்வையிட விடுக்கும் அழைப்பை!

என். மண்டோதரி; வடசேரி, நாகர்கோயில்.

(?) புயல் நிவாரணத்திற்கு நிதி கொடாதவர்களை என்னவென்று அழைப்பது?

"பட்டமரம்" என்ற பட்டமே பொருந்தும்.

ஆர். நல்லமுத்து; திருவனந்தபுரம்.

(?) வரப்போகும் முரசொலி பொங்கல் மலரை எதற்கு ஒப்பிடலாம்?

கரும்பு என்று கூறலாம்; ஆனால் அதையும் அடியிலிருந்து சுவைத்தால் போகப் போக கரிக்குமே!

கற்கண்டு எனலாம்—கற்கண்டும் கரைந்துவிடுமே!

ஏன் வம்பு; சங்கத் தமிழுக்கு ஒப்பிடலாம் நண்பரே!

## சென்னையில் திராவிடர் திருநாள்!

★ சிந்தனைக்கு விருந்தளிப்பதாய்
★ தமிழினத்தின் மாண்பு கூறுவதாய்
★ திராவிடர்களின் கீர்த்தி பாடுவதாய் அமைந்திருக்கும்

★

★ அறிஞர் பல்லோரின் அறிவுரைகளும்!
★ முத்தமிழ் கலா நிகழ்ச்சிகளும்!
★ விளையாட்டுப் போட்டிகளும்!
★ வெற்றி பெறுவோர்க்கு வெண் பொற்கலப் பரிசுகளும் வழங்கப்படும்!

★

★ போட்டிகளில் பங்கேற்று 'உலா வரும் வெண் பொற்கலத்தை, (ரோலிங் கப்) உங்கள் கிளைக் கழகம் அடைவதற்கு முயலுவீர்! வெற்றி காண்பீர்!

—சென்னை மாவட்ட தி. மு. கழகர்.

## கூண்டிற்கு வெளியே....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

குரல் பயங்கரமாக எதிரொலித்தது!

★

இனி தளைக்குவாழ்வில்லை! தான் வாழமுடியாத உலகத்தில், தன் தாய்க்கு மட்டும் யார் வாழ்வு அளித்து விடப் போகிறார்கள்: தன்னை பெற்றுவிட்ட அந்த வயிறு, பசி நோயால் எரிந்து கொண்டிருக்க அவன் விரும்பவில்லை, எனவே அவளைக் கொன்று விட்டான்; அன்னையைக் கொன்று போடுவதற்கு முன்பு ஆயிரம்ஆயிரம் எண்ண அலைகள் அவன் நெஞ்சிலே களம் பிற்று; கோட்புலி நாயனாரும், சிறுத்தொண்டரும், அவனைத் தூண்டி விட்டனர். 'துணிந்து செய்' என்று தட்டிக் கொடுத்தனர். கொடுமை புரிந்து விட்டான்! தாயைக் கொன்று விட்டு தற்கொலை செய்து கொள்ள முயலும்போது, சட்டம் அவன் கைகளில் விலங்கை மாட்டி இருக்கிறது!

★

அவன் நாயைப் போல அலைந்து கொண்டிருந்தபோது, திரும்பிப் பார்க்காத சமுதாயம்!

எனக்கு வாழ்வெங்கே என்று அவன் 'அபயக் குரல்' எழுப்பிய போது செவிகளைத் திருப்பாத சட்டம்!

'உழைக்க உடலிருக்கிறது, உழைக்கிறேன் உணவெங்கே! என்று அவன் கூவியபோது, வாய் மூடிக் கிடந்த சர்க்கார்!

★

அவன் கைகளிலே விலங்கு மாட்டி கூண்டிலே நிறுத்தி இருக்கிறார்கள்!

அவனைக் குற்றம் புரியும்படி தூண்டிவிட்ட,

கோட்புலி நாயனாரும்,
தாயைப் புணர்ந்த ஆரியனும்,
சிறுத்தொண்டரும்—

சிரித்த முகத்தோடு நாட்டிலே உலவிக் கொண்டிருக்கின்றனர்!

ஆனால் இந்த பரிதாபத்திற்குரியவனோ, வாழ்க்கைப் போரிலே தோற்றுப் போய்; அனல்புரளும் நெஞ்சத்தோடும், அழுகின்ற கண்ணீரோடும் நீதிக்கு முன்னால் வாயடைத்து நிற்கிறான்!

அவன் நெஞ்சக் குமுறலை எடுத்துச் சொல்ல, அவன் விடும் கண்ணீரைத் தவிர—அந்த நீதிமன்றத்தில், அய்யகோ! ஒருவருமே இல்லை!

★

ஜனவரி 2 ந் தேதி திருச்சியிலே நடைபெற்றதாக 'சுதேசமித்திரன்' ஏட்டிலே வெளிவந்த பரிதாபகரமான சம்பவத்தை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது.

★


## பொங்கலன்று வருகிறது!

திரையுலகச் செய்திகளைத் தேன் சுவையுடன் அள்ளி அள்ளிக் கொடுக்கும்

**வெள்ளிவீதி**

கண்ணில் படும் இடங்களிலெல்லாம் படங்கள் பல கொண்டு, பரவசத்திலாழ்த்தும் பட உலக மாதம் மும்முறைப் பத்திரிகை

விலை 2 அணா

—: எங்கும் ஏஜெண்டுகள் தேவை :—

நிர்வாகி, "வெள்ளிவீதி"
92, சர்-தியாகராயா ரோடு, தி. நகர், சென்னை-17.





ஆசிரியரும், அச்சடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.